# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - நவீன யுகத்தின் தொடக்கம் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**<u>2 மதிப்பெண் வினாக்கள்</u>**

10 x 2 = 20

1) ஆச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு எவ்வாறு மறுமலர்ச்சி, மத சீர்திருத்தம் மற்றும் புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை விவரி.

**பதில் :** (i) அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு நவீனமயமாதலை வேகப்படுத்தியது. ஜோஹன்னஸ் கூட்டென்பர்க் (கி.பி. (பொ. ஆ) 1394 - 1468) என்பவர் ஜெர்மனியில் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.
(ii) ஒரு கையெழுத்துப் பிரதியின் பல மறுபிரதிகளின் உற்பத்தியை அச்சு இயந்திரம் சாத்தியமாக்கியது; மேலும், மேற்கு ஐரோப்பா முழுவதிலும் அவை பரவுவதற்கும் வழி வகுத்தது.

2) மறுமலர்ச்சியின் விளைவுகள் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

**பதில் :** (i) மறுமலர்ச்சியின் மிகமுக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பு என்பது மனித நேயம் என்ற கருத்தாகும்,
(ii) தனிநபர் வாதம், மதச்சார்பற்ற தன்மை, தேசிய வாதம் ஆகியவற்றை நோக்கிய ஒரு திட்டவட்டமான நகர்வை அது அடையாளப்படுத்தியது.
(iii) வட்டார மொழியில் எழுதுவது என்பது வட்டார மொழிகளின் வளர்ச்சியைச் செழுமைப்படுத்தியது.
(iv) திருச்சபையின் உலகியல் ரீதியான, ஊழல் மலிந்த நடைமுறைகளை விமர்சிப்பதில் மறுமலர்ச்சி ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியது,
(v) புதிய நிலவழிப்பாதைகளின் கண்டுபிடிப்பிலும் உலக வரைபடத்தை மாற்றியமைப்பதிலும் ஒரு முக்கிய பங்கு வகித்திருந்தது.
(vi) சாகசங்களுக்கான உத்வேகமும் அறிவுக்கான தாகமும் நெடிய கடற்பயணங்களை மேற்கொள்வதற்கு உந்துதலாக அமைந்தது

3) கத்தோலிக்க திருச்சபை மீது மார்ட்டின் லூதர் கொண்டிருந்த மாற்றுக் கருத்துக்களை விவரி.

**பதில் :** (i) திருச்சபையுடன் தனக்குள்ள கருத்து வேறுபாடுகளை லூதர் மேலும் விரிவாக விளக்கினார். சடங்குகளும், பாவமன்னிப்பு நடைமுறைகளும் ஆன்ம விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையை அவர் நிராகரித்தார். நம்பிக்கையினால் மட்டுமே ஒருவர் ஆன்ம விடுதலையை அடைய முடியுமென அவர் வாதிட்டார்.
(ii) 'நம்பிக்கையினால் நியாயப்படுத்துதல்' என்ற கொள்கை வடிவை அவர் முன்வைத்தார். பைபிள் அனைத்து மக்களாலும் படிக்கப்பட்டு, விவாதிக்கப்படக் கூடியதே அல்லாமல் திருச்சபையினால் மட்டுமே வாசித்து விளக்கமளிக்கக் கூடிய ஒன்றல்ல.
(iii) கடவுளுக்கும் ஒரு தனிநபருக்குமிடையே திருச்சபை ஓர் இணைப்புப் பாலம் என்பதையும் லூதர் நிராகரித்தார்.

4) மதஎதிர் சீர்திருத்தம் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

**பதில் :** (i) பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கம், கத்தோலிக்க திருச்சபைக்கு ஓர் அச்சுறுத்தலாக விளங்கியது.
(ii) ஊழல்களைக் கடுமையான முறையில் கையாண்டதுடன், பதவிகளின் விற்பனையையும் தடை செய்தனர்.
(iii) கூட்டு வழிபாட்டின் முக்கியத்துவத்தையும், விழாக்களின் முக்கியத்துவத்தையும் ட்ரென்ட் கவுன்சில் மீண்டும் வலியுறுத்தியது.
(iv) மேலும், புனித மறைநூல்களை திருச்சபை மட்டுமே படித்து விளக்கமளிக்க முடியுமென்றும் அது அறிவித்தது.
(v) இயேசு சபைக்கு அதிகாரப்பூர்வமான அனுமதியையும் அது வழங்கியது. கத்தோலிக்க திருச்சபைக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்ட இந்தச் சீர்திருத்தம் 'எதிர் மத சீர்திருத்தம்' என்று அறியப்பட்டது.

5) 'கொலம்பியப் பரிமாற்றம்' என்றால் என்ன?

**பதில் :** (i) அமெரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே அல்லது புதிய உலகத்திற்கும் பழைய உலகத்திற்குமிடையே, தாவரங்கள், விலங்குகள், தொழில்நுட்பம், பண்பாடு மற்றும் விநோதமான நோய்கள் ஆகியவற்றின் இடப்பெயர்வுக்கு ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகள் அமெரிக்காவை வெற்றி கொண்டதே காரணமாகும்.
(ii) இது கொலம்பியப் பரிமாற்றம் (Columbian Exchange) என்று அறியப்படுகிறது.

நிலநடுக்கோட்டைக் கடந்த மாலுமிகள் ஏன் அச்சப்பட்டனர்? முதலில் கடந்து கடல்பயணம் செய்தவர் யார்?

6) **பதில் :** நிலநடுக்கோட்டைத் தாண்ட முதலில் பயணம் செய்தவர் லோபோ கோன்ஸால்வ்ஸ்.
கொதி நீர் ஊற்றுகள் பற்றியும், கடல் அரக்கர்கள் பற்றியும் அவர்கள் அறிந்து அச்சம் மிகுந்தவர்களாக இருந்தனர்.

7) நன்னம்பிக்கை முனை என அழைக்கப்பட்டது? ஏன்?

**பதில் :** கடல்வழியாக இந்தியாவைச் சென்றடைய முடியுமென்ற நம்பிக்கையை வழங்கியதால் அரசர் இரண்டாம் ஜான்-னால் அழைக்கப்பட்டது.

8) உடற்கூறியல் அறிவியல் கண்டுபிடிப்பு யார்?

**பதில் :** வில்லியம் ஹர்வியின்.

9) மனிதநேயம் என்ற சிந்தனை எங்கிருந்து வெளிப்பட்டது?

**பதில் :** இலக்கியத்திலிருந்து.

10) மனிதநேயவாதிகளின் இளவரசர் யார்?

**பதில் :** எராஸ்மஸ்

## 3 மதிப்பெண் வினாக்கள் — 5 x 3 = 15

11) நவீனயுகத்தை அடையாளப்படுத்தும் பண்புகள் யாவை?

**பதில் :** 1. சிந்தனையின் சுதந்திரம்
2, பகுத்தறிவு வாதம்
3. தனிநபர் வாதம்
4. பொருளாதார, அறிவியல் சார்ந்த முன்னேற்றம்

12) மத்திய தரைக்கடல் வணிகத்திலிருந்து மிகப் பெருமளவில் ஆதாயமடைந்த இத்தாலிய நகர அரசுகள் யாவை?

**பதில் :** 1. ஃபளாரென்ஸ்
2. ரோம்
3. வெனிஸ்
4. மிலான்

13) மாக்கியவெல்லி பற்றிக் கூறுக.

**பதில் :** 1. மாக்கியவெல்லி அரசியல் ஆய்வு ஒன்றை 'இளவரசன்' என்ற தலைப்பில் எழுதினார்.
2. இப்புத்தகத்தில், ஓர் அரசன் கட்டாயம் பெற்றிருக்க வேண்டிய நற்பண்புகளைப் பற்றி அவர் எழுதியிருக்கிறார்.
3. ஓர் அரசன் என்பவன் ஒரே சமயத்தில் சிங்கமும், நரியுமாக விளங்க வேண்டுமென்று அவர் அறிவித்தார்.
4. அவரைப் பொறுத்தவரை, வழிமுறைகளைக் காட்டிலும் முடிவுதான் மிகவும் முக்கியமானது.

14) 'வியானர்டோ டாவின்சி' பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. லியானர்டோ டாவின்சி பல்துறைகளில் திறன்மிக்க ஒரு மேதையாவார்.
2. அவர் ஓர் ஓவியர். சிற்பி. கட்டட வடிவமைப்பாளர், ராணுவப் பொறியியலாளர். உடற்கூறியல் வல்லுநர் மற்றும் கவிஞருமாவார்.
3. 'மோனாலிசா', 'கடைசி இரவு விருந்து', 'பாறைகளின் மீதொரு கன்னிப் பெண்' போன்ற அவருடைய ஓவியங்கள். அவரது ஒப்பற்ற படைப்புகளாகும்.

15) இயேசு சபை பற்றிக் கூறுக.

**பதில் :** 1. கிறித்தவ மதத்தைப் பரப்புரை செய்வதற்காக இயேசு சபையை புனித இக்னேஷியஸ் லயோலா நிறுவினார்.
2. அதனுடைய முக்கியத்துவமிக்க பணி என்பது, ஆதரவற்றோருக்குக் கல்விச்சேவையை வழங்குவது தான்.
3. ஆதரவற்றவர்களுக்காக உறைவிடங்கள், அனாதை இல்லங்கள், கல்வி நிலையங்கள் போன்ற எண்ணற்ற அமைப்புகளை இயேசு சபை தொடங்கியது.
4. வெகுவிரைவில் அவர்களுடைய இறைப்பணியாளர்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிந்தது.

## 5 மதிப்பெண் வினாக்கள் — 3 x 5 = 15

16) மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம் மற்றும் புவியியல் சார் கண்டுபிடிப்புகள் எவ்வாறு நவீனயுகத்தின் வருகையைப் பறை சாற்றின - விவாதி.

**பதில் : மறுமலர்ச்சி:**

(i) மறுமலர்ச்சி என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான Renaissance என்பது மறுபிறப்பு எனப்பொருள்படும். இத்தாலியச் சொல்லான Renascita என்பதிலிருந்து தோன்றியது.

(ii) மறுமலர்ச்சி என்று இது அழைக்கப்படுவதற்குக் காரணம், கிரேக்க, இலத்தீன் செவ்வியல் இலக்கியத்தில் ஒரு மறுபிறப்பு அல்லது புத்தாக்கம் நிலவியதாகும்.

**மதச் சீர்த்திருத்தம் :**

(i) இடைக் காலங்களில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை ஒரு வலிமை நிறைந்த நிறுவனமாயிருந்தது. ஆன்மிக ரீதியாகவும், உலகியல் ரீதியாகவும் திருச்சபை அதிகாரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தது.

(ii) திருச்சபையின் தலைவர் போப்பாண்டவர். அவருடைய அப்பதவி பபாசி (Papacy) என்று அறியப்பட்டிருந்தது. அவர் ஓர் இளவரசரைப் போன்ற ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்.

(iii) அவருடைய அதிகாரிகளுள் பலர் ஊழல் நிறைந்தவர்களாக இருந்தனர்; திருச்சபையின் பதவிகள் ஒவ்வொன்றும் விலைகூறி விற்கப்பட்டன.

(iv) அதோடு மட்டுமின்றி மக்கள் தங்களின் பாவங்களுக்காக மனம் வருந்தி, பாவமன்னிப்புக் கோருவார்களெனில் அவர்கள் பாவச்சுமையிலிருந்து விடுவிக்கப்பட்டு சொர்க்கத்துக்குச் செல்ல முடியும் என்றும் மக்களை நம்பச் செய்திருந்தது.

(v) மதச்சீர்திருத்தக்காரர்கள், திருச்சபையின் ஊழல் மிக்க நடைமுறைகளைக் கடுமையாகக் கண்டித்து பிரசுரங்களை விநியோகித்தனர்; புத்தகங்களையும் பதிப்பித்தனர்.

**புவியியல் சார் கண்டுபிடிப்புகள்:**

(i) புதிய நிலப்பரப்புகள், புதிய கடல்வழிப் பாதைகளின் கண்டுபிடிப்புகளின் விளைவாக ஐரோப்பாவின் பொருளாதார மையம் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய இரு அரசுகளுக்கு இடம் பெயர்ந்தது.

(ii) பதினான்காம் நூற்றாண்டில், தாலமியின் 'ஜியாகரபி' (புவியியல்) என்ற நூலின் ஒரு பிரதி, பைஸாண்டியன் பேரரசிலிருந்து மேற்குலகுக்குக் கொண்டுவரப்பட்ட போது ஓர் புத்தார்வம் ஏற்பட்டது.

17) புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க.

**பதில் :** (i) புதிய நிலப்பரப்புகள், புதிய கடல்வழிப்பாதைகளின் கண்டுபிடிப்புகளின் விளைவாக ஐரோப்பாவின் பொருளாதார மையம். போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளுக்கும் இடம் பெயர்ந்தது.

(ii) ஸ்பானியர்களின் புதிய உலகக் கண்டுபிடிப்பு மெக்ஸிகோவையும் தென் அமெரிக்காவையும் வெற்றி கொள்வதற்கு இட்டுச் சென்றது.

(iii) கரும்பின் அறிமுகம், தென் அமெரிக்காவிலும் கரீபியன் தீவுகளிலும் கரும்புத் தோட்டங்கள் அமைய வழிவகுத்தது. ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்யவேண்டி நேர்ந்தது.

(iv) காம்பியா, செனகல், கோரீ, எல்மினா, காங்கோ ஆகிய நாடுகள் ஆப்பிரிக்காவில் அடிமை வர்த்தகத்தின் முக்கியமான மையங்களாக மாறின.

(v) அட்லாண்டிக் நெடுகிலும் நடைபெற்ற வர்த்தகம் ஒரு முக்கோண வர்த்தகமாக ஆகியது.

(vi) ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அடிமைகளை ஐரோப்பிய நாடுகள் விலை கொடுத்து வாங்கின.

(vii) இதற்குப் பதிலாக அமெரிக்காவிலிருந்து அவை சர்க்கரை மற்றும் பிற கச்சாப் பொருட்களைப் பெற்றன. இந்த வர்த்தகத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகள் அளவற்ற லாபம் ஈட்டின.

(viii) புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகள் வணிகப்புரட்சிக்கு இட்டுச் சென்றன. இந்த வணிகப் புரட்சியின் தலையாய அம்சங்கள் வங்கிகள், கூட்டுப் பங்கு நிறுவனங்களின் தோற்றம் மற்றும் வர்த்தகத்தின் வளர்ச்சி ஆகியவையே இவ்வணிகப் புரட்சியின் சிறப்பு அம்சங்களாகும்.

(ix) 'மெர்கண்டலிசம்' என்பது அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பாகும். இந்த அமைப்பில் வணிகரீதியில் லாபத்தையே குறியாகக் கொண்ட ஏகபோக வர்த்தகம் ஆதிக்கம் செலுத்தும்.

(x) புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் விளைவாக, பதினேழாம் நூற்றாண்டு பல்வேறு கிழக்கிந்திய நிறுவனங்களின் உருவாக்கத்தைக் கண்டது. ஆங்கிலக் கிழக்கிந்தியக்கம்பெனி, டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி மற்றும் ஃப்ரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி போன்றவை அத்தகைய நிறுவனங்களாகும்.

(xi) இந்தியாவுக்கு ஒரு புதிய கடல்வழியைக் கண்டுபிடித்ததற்குப் பின்னர் போர்ச்சுகீசியர்கள், கிழக்கிந்திய நறுமணப்பொருள் வர்த்தகத்தில் அராபியர்கள், எகிப்தியர்கள், வெனீசியர்கள் ஆகியோரின் போட்டிகளை படைபலத்தைக் கொண்டு முறியடித்துவிட்டு தங்களுடைய ஏகபோகத்தை நடைமுறைப்படுத்தினர்.

(xii) ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் வர்த்தக ஆதிக்கத்தை செலுத்தி மாபெரும் செல்வத்தை குவித்தது.

18) கிழக்கிந்திய கம்பெனிகள் உருவான விதம் குறித்தும் கிழக்கிந்திய கம்பெனிகள் குறித்தும் கூறுக.

**பதில் :** 1. புவியியல் சார்ந்த கண்டுபிடிப்புகளின் விளைவாக பதினேழாம் நூற்றாண்டு பல்வேறு கிழக்கிந்திய நிறுவனங்களின் உருவாக்கத்தைக் கண்டது.
2. அட்லாண்டிக் நெடுகிலும் நடைபெற்ற வர்த்தகம் ஒரு முக்கோண வர்த்தகமாக மாறியது.
3. இந்தியாவிற்கு ஒரு கடல்வழியைக் கண்டுபிடித்த பின்னர் போர்ச்சுகீசியர்கள், கிழக்கிந்திய நறுமணப்பொருள் வர்த்தகத்தில் அராபியர்கள் எகிப்தியர்கள், வெனிசியர்கள் ஆகியோரின் போட்டிகளை படைபலத்தைக் கொண்டு முறியடித்துவிட்டு தங்களுடைய ஏகபோகத்தை நடைமுறைப்படுத்தினர்.
4. ஸ்பானியர்கள் புதிய உலகத்திலிருந்த தமது காலனிகளில் தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்களின் சுரங்க பணி மற்றும் போக்குவரத்துகளில் ஏகபோக ஆதிக்கத்தை செலுத்தினர்.
5. இதன் விளைவாக காலனியாதிக்கவாதிகள் ஆதாயத்திற்காக காலனி நாடுகளின் செல்வ வளங்களை சுரண்டினர்.
6. இவ்வாறு சுரண்டப்பட்ட செல்வங்கள் அனைத்தையும் கிழக்கிந்திய கம்பெனிகள் தங்கள் நாடுகளில் கொண்டு குவித்து ஏகபோக வாழ்கையை வாழ காரணமாயிற்று.
7. இந்தக் காலகட்டத்தில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி, டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஃப்ரெஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனி போன்றவை அத்தகைய நிறுவனங்களாக இருந்தன